www.padippakam.com



# காக்கை வன்னியன் முதல் கதிர்காமர் வரை

## பகுதி II


48



# பிரித்தானிய நலன்களுக்கு மலையக மக்களை பலிக்கடா ஆக்கிய டி.எஸ். சேனநாயக்கா அரசு

1970-ம் ஆண்டு சிங்கள இளைஞர்கள் மத்தியில் ஏற்பட்ட எழுச்சி மார்க்சிச லெனினிச, மாவோஇச அடிப்படையைக் கொண்டதென்றும், சேகுவேராவினுடைய முன்மாதிரியை அடியொற்றியதென்றும் சொல்லப்பட்டது. ஆனால் உண்மையில் அது ஒரு பௌத்த சிங்கள தேசியவாத எழுச்சியாகவே இருந்தது.

1948 பெப்ரவரி 4-ம் திகதி ஆங்கிலேயர்களிடமிருந்து அதிகாரத்தைப் பெற்றதிலிருந்து நீண்ட காலம் ஆட்சியிலிருந்த



ஐக்கிய தேசியக் கட்சி அடிப்படையில் ஏகாதிபத்திய நாடுகளுக்கும், உலக வங்கிக்கும் சேவகம் புரியும் கட்சியாகவே இருந்து வந்தது. அந்தக் கட்சியினுடைய ஒவ்வொரு செயற்பாடுகளும் அதன் ஏகாதிபத்திய எஜமானர்களின் வழிகாட்டலிலேயே மேற்கொள்ளப்பட்டன.

உதாரணமாக 1948 - 49 இல் ஐ.தே. கட்சி அரசு மலையகத் தோட்டத் தொழிலாளர்களது குடியுரிமை வாக்குரிமையை பறித்தது, பௌத்த சிங்கள வாக்காளர்களை திருப்திப்படுத்துவதற்காக மட்டும் அல்ல; அப்போது மலையக தேயிலை (பெருந்) தோட்டங்களுக்கு சொந்தக்காரர்களாக இருந்த பிரித்தானிய எசமானர்களுக்கு நெருக்கடி வந்துவிடக்கூடாது என்பதை கருத்தில் கொண்டுமே அந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

அதாவது பிரித்தானிய ஆட்சியாளர்கள் தாங்கள் சட்டத்தின் முன் அனைவரையும் சமமாக மதிப்பவர்கள் என்று சொல்லிக் கொண்டு 1928-31 இல் இலங்கையில் பிறந்த அல்லது 5 வருடங்களுக்கு மேலாக தொடர்ச்சியாக இலங்கையில் வாழ்ந்த அனைவருக்கும் வாக்குரிமை வழங்கியபோது - தங்களால் தமிழ் நாட்டிலிருந்து கொண்டு வரப்பட்ட மலையகத் தோட்டத் தொழிலாளர்களுக்கும் வாக்குரிமை வழங்கிவிட்டனர்.

ஆனால் பிற்காலத்தில் மலையகத் தொழிலாளர்கள் மத்தியில் இடதுசாரி இயக்கங்கள் பலமடைய ஆரம்பித்ததுடன் மலையக மக்களும் அரசியல் ரீதியாக தங்களுக்கென்று அமைப்புக்களையும், கட்சிகளையும், தொழிற் சங்கங்களையும் அமைத்துக்கொண்டு பலம் பெறத் தொடங்கியதும் தங்களுக்கு தாங்களே குழி தோண்டி விட்டதை பிரித்தானிய ஆட்சியாளர்கள் உணர்ந்தனர்.

அதாவது மலையகத் தமிழர்கள் அரசியல் ரீதியாகப் பலம் பெறும்போது பெரிய முதலீடுகளைக்கொண்ட தங்களது பெருந்தோட்டங்கள் பாதிப்புக்குள்ளாகும் என்று பிரித்தானிய முதலாளிகள் அஞ்சினார்கள். மலையக மக்களைத் தொடர்ந்தும் உரிமையற்றவர்களாக வைத்திருப்பதன் மூலமே அவர்களிடமிருந்து தங்களுக்குத் தேவையான அடிமைச் சேவகத்தை பெற்றுக்கொள்ளலாம் என்று தங்களுடைய ஆட்சியாளர்களுக்கு அவர்கள் ஆலோசனை தெரிவித்தனர். பிரித்தானிய காலனிய நிர்வாகம் தாங்கள் ஆட்சியில் இருக்கும் வரை 'மலையக மக்களின் குடியுரிமை வாக்குரிமையை பறித்து 'நாயைச் சுடுவதானாலும் சட்டப்படி தான் சுடுவார்கள்' என்று காலனிய நாட்டு மக்கள் மத்தியில் தாங்கள் உருவாக்கி வைத்திருந்த 'நீதிமான்கள்' பிரேமையை சிதைக்க விரும்பவில்லை.

எனவே இலங்கையில் சிங்களவர்களுக்கும் - தமிழர்களுக்கும் இருக்கும் இன முரண்பாட்டை பயன்படுத்தி அதை வளர்த்து விடுவதன் மூலம், என்றுமே தங்களுடைய முதலீடுகள் மற்றும் பிரித்தானிய நலன்களுக்கு எதிராக வர்க்க அடிப்படையில் சிங்களவர்களும், தமிழர்களும் ஒன்றிணைந்து விடாதபடி பார்த்துக்கொண்டார்கள். அதே நேரம் தங்களுக்குச் சார்பான கட்சிகளே இலங்கையில் அதிகாரத்துக்கு வருமாறும் பார்த்துக் கொண்டார்கள்.

ஐக்கிய தேசியக் கட்சியை பொறுத்தவரை அது எப்போதும், பிரித்தானிய மற்றும் அதனுடைய முதலாளித்துவ அணியை நம்பி வாழும் கனவான்கள் கட்சியாகவே இருந்தது. அதற்காக அது இனவாதம் அற்ற கட்சி என்ற அர்த்தமல்ல. அது கடைப்பிடித்த இனவாதம், ஏகாதிபத்திய நலன்களையும் அதன் தேவைகளையும் நிறைவேற்றுவதற்கு துணைபோகக் கூடிய இனவாதமாக இருந்தது. அதனாலேயே அது தன்னைப்போலவே - ஏகாதிபத்திய எஜமானர்களின் நலனில் அக்கறை கொண்ட தமிழ் கனவான்கள் கட்சிகளுடன் சேர்த்து கூட்டு அரசாங்கம் அமைத்தது.

இந்த அடிப்படையிலேயே ஐ.தே.கட்சி 'ஒரே கல்லில் இரண்டு மாங்காய்' என்று சொல்கின்றது போல் பிரித்தானிய எஜமானர்களின் நலன்களைக் காப்பதற்காகவும், பௌத்த சிங்கள தேசியவாதிகளைத் திருப்திப்படுத்துவதற்காகவும் 1948-49 இல் குடியுரிமைச் சட்டத்தைக் கொண்டுவந்து மலையகத் தோட்டத் தொழிலாளர்களின் குடியுரிமை வாக்குரிமையைப் பறித்தது.

அது போலவே டி.எஸ்.சேனநாயக்கா காலத்தில் ஸ்டேர்லிங் பவுண் இருப்பு செலவு செய்யப்பட்ட விடயமும், ஐ.தே.கட்சியின் எஜமான விசுவாசத்திற்கு ஒரு சிறந்த எடுத்துக் காட்டாகும். அதாவது முதலாம் இரண்டாம் உலகயுத்தம் நடந்த காலகட்டத்தில் ஐரோப்பாவில் றப்பருக்கான தேவை அதிகமாக இருந்தது. பிரித்தானியாவுக்கான றப்பர் தேவையின் கணிசமான பகுதியை இலங்கை வழங்கியது. இதற்காக இலங்கைக்கு வழங்க வேண்டிய கொடுப்பனவை பிரித்தானிய ஆட்சியாளர்கள், ஸ்டேர்லிங் பவுண் நிலைக் கணக்கு என்ற ஒரு கணக்கில் போட்டு வைத்திருந்தனர்.

இரண்டாம் உலக யுத்தம் முடிந்ததும்-பல மூன்றாம் உலக நாடுகள் பிச்சைக்கார நாடுகளாக ஆக்கப்பட்ட நிலையில் இலங்கை, ஸ்டேர்லிங் பவுணில் சேமிப்புக் கணக்கைக் கொண்ட பணக்கார நாடாக இருந்தது.

1948 பெப். 4ல் டி.எஸ். சேனநாயக்காவிடம் அதிகாரத்தை கைமாற்றியதும், இந்த ஸ்டேர்லிங் பவுண் சேமிப்பை எப்படி செலவு செய்வது என்பது தொடர்பாக பிரித்தானிய கனவான்கள் அவருக்கு இரகசிய ஆலோசனை வழங்கியிருந்தனர்.

இந்த நிலுவைப் பணத்தை எடுத்து மக்களுக்கு இலவச உதவிகளை வழங்குவதன் மூலம், அடுத்த தேர்தலில் அவர்களின் வாக்குகளைப் பெற்று ஆட்சியை தொடர்ந்து தக்க வைத்துக் கொள்ளலாம் என்பதே அந்த ஆலோசனையாகும். இதன் அடிப்படையில் டி.எஸ். சேனநாயக்கா அரசாங்கம், இலவச அரிசி முதலான உணவுப் பொருட்களை வழங்குவதற்கு அச் சேமிப்பை செலவு செய்து அழித்து முடித்தது.

உண்மையில் இவ்வாறு செய்யாது, அந்தப் பணத்தை கைத்தொழில் துறையில் முதலீடு செய்திருந்தால், அந்தப் பணத்திற்கு தொழிற் துறைக்கு இயந்திர சாதனங்களை இறக்குமதி செய்திருந்தால் இலங்கை கைத்தொழில் துறையில் முன்னேற்றம் அடைந்திருப்பதோடு பிற்காலத்தில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியும், வேலையில்லாத் திண்டாட்டமும் குறைந்திருக்கும்.

ஆனால் பிரித்தானிய எஜமானர்கள், இலங்கையை ஒரு கைத்தொழில் நாடாக உருவாக்க விரும்பவில்லை. இலங்கை ஒரு கைத்தொழில் நாடாக உருவாகியிருந்தால் அங்கே தொழிலாளர்களுக்கிடையே ஒற்றுமை ஏற்பட்டு வர்க்க ஒற்றுமை மேலோங்கி தங்களால் தூண்டிவிடப்பட்ட சிங்கள - தமிழ் இன முரண்பாடு கூர்மையடையாது போய்விடும் என்றும், அதனால் இலங்கையிலுள்ள தங்களது சொத்துக்களுக்கும் முதலீடுகளுக்கும் ஆபத்து ஏற்படும் என்று பிரித்தானிய ஆளும் வர்க்கம் நினைத்து. தங்களுடைய நினைப்பை, அதாவது தங்களுக்கு வரக்கூடிய ஆபத்தை டி.எஸ். சேனநாயக்காவைக் கொண்டு முன்கூட்டியே வேறு திசையில் திருப்பிவிட்டனர்.

இவ்வாறு பல்வேறு விடயங்களிலும் ஏகாதிபத்திய நலன்களைச் சார்ந்தே ஐ.தே.கட்சி செயற்பட்டு வந்ததால், பௌத்த சிங்கள தேசிய வாதிகள் பாரிய அதிருப்திக்கு உள்ளாகியிருந்தனர். இந்த அதிருப்தியின் வெளிப்பாடாகவே 1970 எழுச்சி உருப் பெற்றது.

**இன முரண்பாட்டை பயன்படுத்தி அதை வளர்த்து விடுவதன் மூலம், என்றுமே தங்களுடைய முதலீடுகள் மற்றும் பிரித்தானிய நலன்களுக்கு எதிராக வர்க்க அடிப்படையில் சிங்களவர்களும், தமிழர்களும் ஒன்றிணைந்து விடாதபடி பார்த்துக்கொண்டார்கள். அதே நேரம் தங்களுக்குச் சார்பான கட்சிகளே இலங்கையில் அதிகாரத்துக்கு வருமாறும் பார்த்துக் கொண்டார்கள்.**

**பிரித்தானிய ஆட்சியாளர்கள் தாங்கள் சட்டத்தின் முன் அனைவரையும் சமமாக மதிப்பவர்கள் என்று சொல்லிக் கொண்டு 1928-31 இல் இலங்கையில் பிறந்த அல்லது 5 வருடங்களுக்கு மேலாக தொடர்ச்சியாக இலங்கையில் வாழ்ந்த அனைவருக்கும் வாக்குரிமை வழங்கியபோது - தங்களால் தமிழ் நாட்டிலிருந்து கொண்டுவரப்பட்ட மலையகத் தோட்டத் தொழிலாளர்களுக்கும் வாக்குரிமை வழங்கிவிட்டனர்.**

- நக்கீரன்

படிப்பகம்